அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (26.06.2025) சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இளங்கலை மருத்துவ மாணவ, மாணவியர்களுக்கு 82வது பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு மாணவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்களை வழங்கி விழா உரையாற்றினார். இந்நிகழ்வில் மரு.கலாநிதி வீராசாமி எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் ஐட்ரீம் மூர்த்தி, ஆர்.டி.சேகர், அரசு ஸ்டான்லி மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.மகேஷ், துணை முதல்வர் மரு.ஜானட் சுகந்தா, உள்ளுரை மருத்துவ அலுவலர் மரு.வனிதாமலர், மண்டலக்குழுத் தலைவர் ஸ்ரீராமுலு மற்றும் மருத்துவத்துறை பேராசிரியர்கள், மருத்துவ மாணவர்களின் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

மும்பையில் கலைஞர் பிறந்த நாள் விழா! உறுப்பினர் உரிமை அட்டைகள் - நல உதவிகள் வழங்கல்!

கவிஞர் சல்மா எம்.பி. வழங்குகிறார்! அலிசேக் மீரான் தலைமையில்

மும்பை, ஜூன் 27 - மும்பை புறநகர் திராவிட முன்னேற்றக் கழகம் ஆரே காலனி கிளைக் கழகம் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா உறுப்பினர் உரிமை அட்டைகள் வழங்குதல் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நாளை (28.06.2025 சனிக்கிழமை) மாலை 6 மணியளவில் ஆரே காலனி, ஆரே காலணி, யூனிட் எண்: 7 அலிசேக் மீரான் தலைமையில் நடைபெறுகிறது. நெல்லை விநாயகர் கோவில் திடலில் வைத்து முத்தமிழறிஞர் கலைஞரின் 102 ஆவது பிறந்தநாள் விழா வெகுச் சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது.

மும்பை புறநகர் திராவிட முன்னேற்றக் கழகம் ஆரே காலனி கிளைக் கழகம் சார்பில் நடைபெறவுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா மராத்திய மாநிலத் திராவிட முன்னேற்றக் கழகப் பொறுப்பாளர் அலிசேக் மீரான் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் கவிஞர். சல்மா எம்.பி. சிறப்புரையாற்றுகிறார். பொறுப்புக்குழு உறுப்பினர்கள் சிவக்குமார் சுந்தர் ராஜ் வரவேற்புரையும் முனைவர் வதிலை பிரதாபன் தொடக்கவுரையும் ஆற்றுகிறார்கள்.

தந்தை பெரியார் படத்தை பொறுப்புக் குழு உறுப்பினர் ஜேம்ஸ் தேவதாசனும், பேரறிஞர் அண்ணா படத்தை ஆரே காலனிக் கிளைக் கழக முன்னோடி கு.தர்மலிங்கமும், முத்தமிழறிஞர் கலைஞர் படத்தை மாநில இளைஞரணி அமைப்பாளர் ந.வசந்தகுமாரும் திறந்து வைக்கிறார்கள்.

விழாவில், கழக உறுப்பினர் உரிமை அட்டைகளை கழகத் தோழர்களுக்கு வழங்குவதுடன் அந்தப் பகுதிவாழ் மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட உள்ளது.

பொறுப்புக் குழு உறுப்பினர்கள் பி.கிருஷ்ணன், அ. இளங்கோ, வே. சதானந்தன், வெ.அ.ஜெய்னுலாபுதீன், வீரை சோ.பாபு, மெஹபூப் பாஷா, சோ.பா.குமரேசன், சிலுவை தாசன், மற்றும் மும்பை திராவிடர் கழகத் தலைவர் பெ.கணேசன், பகுத்தறிவாளர் கழகத் தலைவர் அ.இரவிச்சந்திரன், பாவலர் நெல்லை பைந்தமிழ், முகமதலி ஜின்னா பாண்டு, (ஆரே காலனி கிளை)கவிஞர் வீர மணி, பொய்சர் மூர்த்தி, ஆரே காலனி காங்கிரஸ் செல்லக்கண்ணு ஆகியோர் வாழ்த்துரை வழங்குகிறார்கள்.

ஆரே காலனிக் கிளைக் கழகத்தைச் சேர்ந்த தோழர்கள் சேகர் சுப்பையா, கனகராஜ், தமிழ்ச் செல்வன், சுரேஷ் குமார், கட்டமுத்து, முனியன், கோவிந்தராஜ், கிருஷ்ண மூர்த்தி கணேசன், பொன்னுசாமி ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பிக்கிறார்கள்.

க.ஜீவானந்தம் , ஜோகேஸ்வரி தமிழினநேசன், தானா அ.பாலமுருகன், Mulund எஸ். பெருமாள், வாஷிபழனி, முத்து, அ.பாலசுப்ரமணியம், முத்தமிழ் தண்டபாணி பிவண்டி முஸ்டாக் பாய் தானே அ.பாலமுருகன் வாஷி கிளைக் கழகத் தோழர்கள், தில்லை, ஆறுமுகம், எம்.இ.முத்து, பசுபதிநாதன்,

சயான் சு.சுடலையாண்டி, பகத் சிங் நகர் ரவி, மொகிதீன், செம்பூர் நம்பி, சீதா கேம்ப் ராஜேந்திரன், ஆழ்வார், திவா வேல்முருகன், அந்தேரி எம். பொன்மணி, பரமசிவம் (செம்பூர்) பாண்டுப் செல்லத்துரை, உதயசூரியன், ஆனந்தரமேஷ், க.சுந்தர், மாரி, (பாண்டுப் கிளை) செய்யதுபாய், ராமு, (அம்பர்நாத் கிளை) ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

இறுதியில் ஆரே காலனிக் கிளைக் கழக முன்னோடி மா.துரைராஜ் நன்றியுரையுடன் விழா நிறைவுறுகிறது. மும்பையின் பல்வேறு பகுதிகளில் வசிக்கும் கழக உணர்வாளர்கள் யாவரும் விழாவில் கலந்து மகிழும்படி அன்புடன் அழைக்கப்படுகிறார்கள்.

சித்தாமூர் மேற்கு ஒன்றிய தி.மு.க. இளைஞரணி சார்பில் பொதுக்கூட்டம்!

காஞ்சிபுரம், ஜூன் 27 - காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், சித்தாமூர் மேற்கு ஒன்றிய தி.மு.க. இளைஞரணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் 102 -வது பிறந்தநாள் விழா மற்றும் நாடு போற்றும் நான்காண்டு திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க கூட்டம் நெற்குணம் ஊராட்சியில் ஒன்றிய அமைப்பாளர் லோகநாதன் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு பேசினார். உடன் மாநில இளைஞர் அணி துணை செயலாளர் அப்துல் மாலிக், மாவட்ட அமைப்பாளர் யுவராஜ், ஒன்றிய செயலாளர் ஏழுமலை, மாவட்ட கவுன்சிலர் குணசேகரன், ஆதி திராவிட நலக்குழு அமைப்பாளர் புருஷோத்தமன், ஆண்டோ, யுவராஜ், இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் மாரிமுத்து, ராமமூர்த்தி, வடிவேல் முருகன், பழனி, சத்தியசீலன், சூரியகுமார், ஒன்றிய நிர்வாகிகள் வெங்கட கிருஷ்ண, வெங்கடகிருஷ்ணன், தனசேகரன், நாகப்பன், குமுதா மதுரை, செல்வம், வேதாசலம், ஜெயகண்ணன், ஆறுமுகம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

முனைவர் மு.பி. பாலசுப்பிரமணியன்
ஜூன் 27 (2020)

தனது இளமைப் பருவத்திலேயே தீவிர கழகப் பணியாற்றத் தொடங்கி 1961ஆம் ஆண்டு நெல்லையில் நடைபெற்ற மாவட்ட தி.மா.மு.க. மாநாட்டுப் பொருளாளராகவும், 1965ல் நெல்லை மாவட்டம், அய்யாபுரம் கிளைச் செயலாளராகவும், தலைமை இலக்கிய அணித் தலைவராகவும், கழக வெளியீட்டுச் செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

கவித்திறன், உரைநடை வீச்சு, சிறுகதைச் சிறப்பு, நாடக ஊடகம், இலக்கிய ஆய்வு, அரங்கங்களை ஆட்கொள்ளும் சொற்பொழிவு அத்துணையிலும் முத்திரை பதித்த இவர், பாவேந்தர் பாரதிதாசன் திருக்கரத்தால் 'பகுத்தறிவுப் பாவலர்' எனும் பட்டம் பெற்றவர்.

"கழக வளர்ச்சிப் பணிகளில் இளமைக் காலம் தொட்டு ஈடுபாடு கொண்டு தொடர்ந்து தொண்டாற்றி வருபவர். அவரது எழுத்தாற்றல், இலக்கிய ஆய்வுத் திறன், கவித்திறன் முதலிய பல்வேறு திறன்களும், கழக வளர்ச்சியில் அவர் கொண்டுள்ள ஈடுபாடும் இளைஞர் சமுதாயத்திற்குத் திசைகாட்டும் '' என்று பாராட்டிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், 2005ஆம் ஆண்டு, தலைமைக் கழகத்தின் சார்பில் 'பாவேந்தர் விருதினை' வழங்கி சிறப்பித்தார்.

7வது உலகத் தமிழ் மாநாட்டில் தமிழக அரசின் பிரதிநிதியாகக் கலந்து கொண்ட இவர், தமிழக அரசின் சார்பில் 'பாவேந்தர் பாரதிதாசன்' நூற்றாண்டு பாவேந்தர் விருது கலைஞர் கரத்தால் பெற்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

அ. மணிமேகலை
ஜூன் 27 (2017)

தனது இளமைக் காலம் முதலே கழகத்தில் ஈடுபாடு கொணடு கழகப் பணியாற்றியவர்.

மெரட்டூர் கிளைச் செயலாளர், மீஞ்சூர் ஒன்றிய துணைச் செயலாளர், மாவட்ட துணைச் செயலாளர், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

தலைவர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்ட மகளிர் சுயஉதவிக் குழுக்களை திருவள்ளூர் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் தொடங்கி மகளிரின் முன்னேற்றத்திற்கு பாடுபட்டவர்.

கழக அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

தி.மு.க. இளைஞர் அணி

முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

கோவை மாநகர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் இரா.தனபால் அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு கோவை மாநகர் மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதிகளில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

வ. எண்	நாள்	பகுதி	இடம்	பேச்சாளர்கள்
1	01.07.2025	பீளமேடு பகுதி	தண்ணீர்ப் பந்தல்	மீனா லோகநாதன் சி.கா.சுகன் மந்த்ரன்
2		ஆவாரம்பாளையம் பகுதி	ஆவாரம்பாளையம், தெற்கு வீதி–7.	இளஞ்செல்வி கார்த்திக் செ.மதுமிதா
3		பாப்பநாயக்கன் பாளையம் பகுதி	தங்கம் பேக்கரி அருகில், பழையூர், பாப்பநாயக்கன்பாளையம்	பொள்ளாச்சி மா.உமாபதி சீ.தருண்குமார்
4		சௌரிபாளையம் பகுதி	உடையாம்பாளையம், காந்தி நகர்.	பொள்ளாச்சி மா.உமாபதி லயோலோ த.ராஜசேகர்
5	02.07.2025	சிவானந்தா குடியிருப்பு பகுதி	சிவானந்தா குடியிருப்பு பேருந்து நிறுத்தம், அண்ணா நகர்.	சிங்கை பிரபாகரன் கே.ஹரிகிருஷ்ணன்
6		இராமநாதபுரம் பகுதி	ஒலம்பஸ், ராமநாதபுரம்.	சிங்கை பிரபாகரன் சி.கா.சுகன் மந்த்ரன்
7		புலியகுளம் பகுதி	பெரியார் சிலை அருகில், புலியகுளம்.	அதிரடி அல்தாப் செ.மதுமிதா
8		வடகோவை பகுதி	நன்னெறி கழக வீதி, பூ மார்க்கெட்.	அதிரடி அல்தாப் சீ.தருண்குமார்
9	03.07.2025	கணபதி பகுதி	தமிழ்நாடு பேருந்து நிறுத்தம், கண்ணன் டிபார்ட்மென்ட் அருகில்.	பவானி கண்ணன் லயோலோ த.ராஜசேகர்
10		இரத்தினபுரி பகுதி	தயிர் இட்டேரி, புதுப்பாலம், இரத்தினபுரி.	பவானி கண்ணன் கே.ஹரிகிருஷ்ணன்
11		மணியகாரன்பாளையம் பகுதி	காந்தி மாநகர் விளையாட்டு மைதானம் அருகில்	சிங்கை சௌந்தர் சி.கா.சுகன் மந்த்ரன்
12		சங்கனூர் பகுதி	சக்தி நகர், நல்லாம்பாளையம் ரோடு.	சிங்கை சௌந்தர் செ.மதுமிதா
13	04.07.2025	அண்ணா நகர் பகுதி	பீளமேடு புதூர்	கோவை சம்பத் சீ.தருண்குமார்
14		நீலிக்கோணாம் பாளையம் பகுதி	துளசியம்மாள் லே–அவுட், 54–வது வட்டம்.	கோவை சம்பத் லயோலோ த.ராஜசேகர்
15		ஒண்டிப்புதூர் பகுதி	நேதாஜிபுரம்	இளஞ்செல்வி கார்த்திக் கே.ஹரிகிருஷ்ணன்
16		நந்தா நகர் பகுதி	நெசவாளர் குடியிருப்பு	மீனா லோகுநாதன் சி.கா.சுகன் மந்த்ரன்
17	05.07.2025	பெரிய கடைவீதி பகுதி	வைரம் வீதி–கருப்பையா வீதி சந்திப்பு	இரா.சேரலாதன் செ.மதுமிதா
18		கெம்பட்டி பகுதி	நாடார் வீதி, கெம்பட்டி குடியிருப்பு.	பொள்ளாச்சி மா.உமாபதி சீ.தருண்குமார்
19		கோட்டைமேடு பகுதி	ரங்கே கவுண்டர் வீதி, காட்டூர்.	பொள்ளாச்சி மா.உமாபதி லயோலோ த.ராஜசேகர்
20	09.07.2025	சிங்காநல்லூர் பகுதி	கள்ளிமடை காமாட்சியம்மன் கோயில் அருகில்	க.நாகநந்தினி யுவராஜ் கே.ஹரிகிருஷ்ணன்
21		நஞ்சுண்டாபுரம் பகுதி	அன்பில் தர்மலிங்கம் திடல், 65–வது வார்டு.	க.நாகநந்தினி யுவராஜ் சி.கா.சுகன் மந்த்ரன்
22		காந்திபுரம் பகுதி	சித்தாபுதூர் சி.எம்.சி. குடியிருப்பு.	சிங்கை பிரபாகரன் செ.மதுமிதா
23		சாய்பாபா குடியிருப்பு பகுதி	கே.கே.புதூர், 6–வது வீதி.	சேலம் சுஜாதா சீ.தருண்குமார்
24		வேலாண்டிபாளையம் பகுதி	விஜய் பாரடைஸ் எதிர்ப்புற சாலை, 44–வது வார்டு.	சேலம் சுஜாதா லயோலோ த.ராஜசேகர்
25	10.07.2025	வடவள்ளி பகுதி	வடவள்ளி பழைய பேருந்து நிறுத்தம்.	கோவை சம்பத் கே.ஹரிகிருஷ்ணன்
26		வீரகேரளம் பகுதி	அண்ணா திடல், வீரகேரளம்.	கோவை துரைமுருகன் சி.கா.சுகன் மந்த்ரன்
27		பாப்பநாயக்கன் புதூர் பகுதி	சீரநாயக்கன்பாளையம், மாரியம்மன் கோவில் திடல்.	கோவை சம்பத் செ.மதுமிதா

கோயம்புத்தூர்
நாள் : 26.06.2025

அமைச்சர் பி.கே. சேகர்பாபு முன்னிலை! வி. சுதாகர் தலைமை!

எழும்பூர் தெற்கு பகுதி சார்பில் 28 இணையர்களுக்கு சீர்வரிசையுடன் திருமணங்கள்!

அமைச்சர் எ.வ.வேலு நடத்தி வைக்கிறார்!

சென்னை, ஜூன்.27 சென்னை கிழக்கு மாவட்டம் எழும்பூர் தெற்கு பகுதி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்தநாள் முன்னிட்டு செம்மொழி 11 ஆயிரங் காலப்பயிர் வளரட்டும்! ஆதவன் கலைஞரை புகழட்டும்! என்ற தலைப்பில் இன்று 27.06.2025 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு பெரியார் திடல், வேப்பேரியில் மாவட்ட செயலாளர் - அமைச்சர் பி.கே. சேகர்பாபு முன்னிலையில் பகுதி செயலாளர் வி. சுதாகர் தலைமையில் நடைபெறுகிறது.

விழாவில் 28 இளையர்களுக்கு சீர்வரிசையுடன் கூடிய திருமணங்களை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ. வேலு நடத்தி வைக்கிறார்.

இதில் மேயர் பிரியா ராஜன்,தயாநிதிமாறன் எம்பி, சட்டமன்ற உறுப்பினர்கள். இ. பரந்தாமன்,ப. தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், அ.வெற்றி அழகன், மற்றும் பா.ரங்கநாதன், சொ. வேலு எ.சி.,பி.எம் யாழினி,கோ ஏகப்பன், ஸ்ரீராமுலு எம் சி, கே.எஸ்.எம். நாதன், ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி., அ நிர்மலா தேவி பரிதி இளம் சுருதி எம்.சி. ,பாத்திமா முசாபர் எம்.சி., எழும்பூர் தெற்கு,வடக்கு பகுதி கழக நிர்வாகிகள். எஸ்.ரசூல்,டி.வி. வேலு, எம்.மலர்மாறன், கே. அன்னபூரணி, எஸ்.ஜெகதீசன், எம்.தில்லைகுமார், பி.சி.சம்பத் குமார், ஊ.கே.கருணாகரன், கே.வள்ளி,சூளைசுப்பராயலு, எழும்பூர் தெற்கு,வடக்கு வட்ட கழக செயலாளர்கள் வி.விஜயகுமார்,ஆர்.பாபு(எ) சந்திரசேகரன் ,எஸ்.டால்பின் ஹரி, இ.மொய்தீன், வான்மதி கதிரவன், தி.தயாளன், வி.அபாய்,சு.மனோகர், ந. பாலு, ஆர்.எம்.ரங்கநாதன், சி.சேகர், மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்.